**திருவாரூர் மாவட்ட கருவூல அலுவலரின் செயல்முறை ஆணைகள்.**

**பிறப்பிப்பவர்: திரு.ஆர்.முருகவேல், எம்.ஏ., எம்.பில்.,**

609

ந.க. எண்: 0160 / 2023 / அ1 , நாள்:.06.04.2023.

சார்நிலைக் கருவூலம் 05 MAY 2023

4/5/2023

பொருள் பணியமைப்பு - கருவூல கணக்குத்துறை - திருவாரூர் மாவட்ட கருவூலஅலகு - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV-ல் அடங்கிய பணிகளுக்கான போட்டித்தேர்வு வாயிலாக தேர்வு செய்யப்பட்டு திருவாரூர் மாவட்டக் கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.ஞா.அபிநயா, இளநிலை உதவியாளர் என்பவருக்கு பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை

1. செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாயம், சென்னை, கடித எண் 1149/PSD-H2 /2019, நாள். 18.02.2019.
2. முதன்மை செயலர் / ஆணையர், கருவூல கணக்குத்துறை, சென்னை அவர்களின் செயல் முறை ஆணை ந.க. 7107/2019/சி3, நாள்.04.03.2019.
3. கருவூல அலுவலர், மாவட்ட கருவூலம், ,திருவாரூர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.2095/2019/அ1, நாள்: 08.03.2019.
4. கூடுதல் தலைமைச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.11414/CV-3(2)/2020-3, நாள்: 26.12.2022
5. செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாயம், சென்னை, கடித எண் 1149/PSD-H2 /2019, நாள். 17.03.2023
6. இணை இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.076086/V3/2019, நாள்: 01.10.2019

**ஆணை:-**

திருமதி.ஞா.அபிநயா, இளநிலை உதவியாளர், சார்நிலை கருவூலம், மன்னார்குடி என்பவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி **IV-ல்** அடங்கிய பணிகளுக்கான போட்டித்தேர்வு **2015-2016, 2016-2017** மற்றும் **2017-2018**-ல் தேர்ச்சிப் பெற்று, திருவாரூர் மாவட்ட கருவூல அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, திருவாரூர் மாவட்ட கருவூல அலகில் 08.03.2019 முற்பகல் முதல் பணியேற்பு செய்து பணிபுரிந்து வருகின்றார்.

Scanned with Oken Scanner

Scanned with CamScanner

பார்வை-2ல் காணும் முதன்மை செயலர் / ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில், தனியரின் சாதி மெய்தன்மை தொடர்பான அறிக்கையினை மாநில கூர்நோக்கு குழுவிடமிருந்து பெற்ற பிறகு தனியரின் பணியினை வரன்முறைபடுத்த ஆணையிடப்பட்டிருந்தது. அதன்படி, பார்வை-4ல் காணும் மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை அலுவலகத்திலிருந்து தனியரின் சாதி மெய்தன்மை உண்மையானது என அறிக்கை வரப்பெற்றுள்ளது. மேலும், பார்வை-5ல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் தனியரின் சாதி மெய்தன்மை அறிக்கை வரப்பெற்றுவிட்டபடியால் தனியரின் பணியினை வரன்முறைபடுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பார்வை-6ல் காணும் இணை இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்ககம், சென்னை அவர்களின் கடிதத்தில் தனியரின் 10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் உண்மையானது தான் என்ற மெய்தன்மை அறிக்கை வரப்பெற்றுள்ளது.

எனவே தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகளுக்கான பொதுவிதி 23(எ)யின்படி, தனியர் பணியேற்பு செய்த நாளான 08.03.2019 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

மேலும், இந்த பணிவரன் முறை ஆணையானது சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக்கிளை ஆகியவற்றில் இந்த பணி அமர்வு சம்மந்தமாக நிலுவையில் உள்ள வழக்குகளின் தீர்ப்புகளுக்கு உட்பட்டது.

("The Regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras relationg to the recruitment to the post included in CCSE-IV for the year 2015-2016, 2016-2017 and 2017-2018")

மேற்கண்ட பணியாளர் பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகாலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

6/4/23

கருவூல அலுவலர்,
திருவாரூர்.

6/4/23 & 6/4/23

பெறுநர் :
திருமதி.ஞா.அபிநயா,
இளநிலை உதவியாளர்,
சார்நிலை கருவூலம்,
மன்னார்குடி.
(உரிய வழியாக)

நகல்: உதவி கருவூல அலுவலர், சார்நிலை கருவூலம், மன்னார்குடி

B.க.
மே.இ.எண் A1/609/2023 நாள் 5/5/23

வழங்கலாகிறது

5/5/2023
Assistant Treasury Officer
Mannargudi.

1239118